# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)

(Affiliated to All India Federation of Power Diploma Engineers)

144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.

44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014.

Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| Er. A.ANTONYPADOVARAJ | Er. V. ASHOKKUMAR | Er. R.BADRINARAYANAN |
| 94438 72166 | 94442 13621 | 96001 49791 |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

<u>க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/தீர்மானம் எண்.26/தேதி 1.12.2016.</u>

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் – 50வது மாநில பொதுக்குழு மற்றும் மாநில செயற்குழு தீர்மானம் – பிரிவுப் பொறியாளர் பிரச்சனையை தீர்த்திட பொறியாளர் சங்கத்துடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடத்திட வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை: 1. மாநில பொதுக்குழு தீர்மானம் கடித நாள் 21.07.2016.
2. மாநில செயற்குழு நாள் 26.11.2016.

---

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 50வது மாநில பொதுக்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் மீது வாரியம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி மாநில செயற்குழு கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம்–26</u>**

தமிழக மக்களின் நலன்கருதி இரவு பகல், மழை வெள்ளம் பாராமல் பணியாற்றிவரும், பொதுமக்களை அன்றாடம் சந்திக்கும் பொறுப்பில் உள்ள விநியோகப்பிரிவு பொறியாளர்கள் தொடர்ந்து அதிகரித்துவரும் பணிச்சுமை காரணமாக மனிதளவிலும் உடலளவிலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரிவுப் பொறியாளர்கள் பிரச்சனைகளை தீர்த்து பொதுமக்களின் சேவையை அதிகரித்திட வாரியம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள நீண்டகாலமாக பொறியாளர் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால் இதன் மீது வாரியம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பிரிவுப் பொறியாளர்களின் பிரச்சனைகளை பாராமுகமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் அனைத்து தவறுகளுக்கும், விபத்துகளுக்கும் அவர்களையே பொறுப்பாக்கி விசாரணையின்றி தண்டித்து வருகிறது.

Continuation Sheet

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

சமீப காலங்களில் விசாரணை ஏதுமின்றி பிரிவுப் பொறியாளர்கள் முதல் உதவி செயற் பொறியாளர்கள் வரை பணி இடை நீக்கம் செய்யப்பட்டும், ஊர்மாறுதல் செய்யப்பட்டும் தண்டிக்கப்பட்டும் உள்ளனர். வாரியத்தின் நியாயமற்ற இச்செயல் பிரிவுப் பொறியாளர்களை மிகுந்த பாதிப்புக்குள்ளாக்கி வாரியப் பணியில், பொதுமக்கள் சேவையில் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

எனவே, பிரிவுப் பொறியாளர் பிரச்சனையை தீர்த்திட உரிய நடவடிக்கை உடன் மேற்கொண்டிட பொறியாளர் சங்கத்துடன் உடனடியாக பிரிவுப் பொறியாளர் பிரச்சனை, பொதுமக்கள் சேவை அதிகரித்தல் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திட வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

03/16

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.

<u>நகல்</u>
இயக்குநர் / விநியோகம் / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.